Recruitmentindia.in

TC-14

092/DM/19

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## SURVEY DEPARTMENTAL TEST — SENIOR DRAUGHTSMAN TEST — PAPER – I

(Without Books)

Maximum Time : 2.30 hours — Maximum Marks : 100

## *IMPORTANT INSTRUCTIONS*

### OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB : Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**

இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**

இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 100 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.

   இவ்வினாத்தாள் 100 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

2. Answers all questions. All questions carry equal marks.

   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

[Turn over

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.
விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.
வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best.**

(b) In any case, a candidate shall choose only one response for each question.

(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.
வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.
விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.
மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. Which Register should be maintained for the Survey Stones maintenance in ———— Taluk Office

(A) Taluk Stock Register (B) 8 A Register

(C) Register V (D) Register VI

சர்வே கற்கள் பராமரிப்பு சம்மந்தமாக வட்ட அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடு

(A) வட்டக்கல் இருப்புப்பதிவேடு (படிவம்) (B) 8 A பதிவேடு

(C) பதிவேடு V (D) பதிவேடு VI

2. The Village Map are drawn in

(A) 1:75000 M.M (B) 1:40000 M.M

(C) 1:5000 M.M (D) 1:50000 M.M

கிராம வரைபடங்கள் ———— என்ற அளவில் வரையப்பட வேண்டும்

(A) 1 : 75000 மி.மீ (B) 1 : 40000 மி.மீ

(C) 1 : 5000 மி.மீ (D) 1 : 50000 மி.மீ

3. While Surveying the wet lands the field formation of ———— area

(A) 2 acres (B) 5 acres

(C) 10.00 acres (D) 15.00 acres

ஒரு கிராமத்தை சர்வே செய்யும்போது பட்டா நிலங்களை பொறுத்தவரையில் நஞ்சையாக இருக்கும்போது ———— ல் புலங்கள் அமைக்கப்படுகிறது

(A) 2 ஏக்கர் (B) 5 ஏக்கர்

(C) 10.00 ஏக்கர் (D) 15.00 ஏக்கர்

4. The 10 (1) Chitta Register ———— lists

(A) Nominal (B) Survey Field Number

(C) Sub – divisions (D) Owner

10 (1) சிட்டா பதிவேடு ———— வரிசைப்படி இருக்கும்

(A) அகர வரிசை (B) சர்வே புலஎண்கள்

(C) உட்பிரிவுகள் (D) உரிமையாளர் பெயர்

5. In the SI.No 11 of the "A" Register will be Mention

(A) Sub division (B) Irrigation

(C) Area (D) Remarks

"அ" பதிவேட்டில் கலம் 11-ல் ———————— பதிவு செய்யப்பட்டிருக்கும்

(A) உட்பிரிவு எண் (B) பாய்ச்சல் ஆதாரம்

(C) பரப்பு (D) குறிப்பு

6. Stone Inspection in the maintenance work will be commenced ———————— month in the every year

(A) January (B) April

(C) March (D) December

பராமரிப்பு பணியின்போது கற்கள் தணிக்கை ———————— ஆண்டுதோறும் எந்த மாதத்தில் தொடங்கப்படும்

(A) ஜனவரி (B) ஏப்ரல்

(C) மார்ச் (D) டிசம்பர்

7. Area Correction into ———————— types

(A) 4 (B) 2

(C) 3 (D) 5

பரப்பு பிழை ———————— வகைப்படும்

(A) 4 (B) 2

(C) 3 (D) 5

8. The Land Records Computerized Scheme introduced in ———————— year

(A) 1995 (B) 1994

(C) 1992 (D) 1991

நிலப்பதிவுருக்கள் கணினிமயமாக்கல் திட்டம் ———————— ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது

(A) 1995 (B) 1994

(C) 1992 (D) 1991

9. The Modern Survey instruments (GPS / Total Stations) was commenced in ———— district

(A) Perambalur (B) Trichy

(C) Pudukottai (D) Chennai

நவீன தொழில்நுட்ப கருவிகள் (GPS/Total Station) மூலம் அளவு பணிகள் முதற்கட்டமாக ———— மாவட்டத்தில் துவக்கப்பட்டது

(A) பெரம்பலூர் (B) திருச்சி

(C) புதுக்கோட்டை (D) சென்னை

10. The field numbers during the field Survey in village will be started / commenced from

(A) North — East (B) North — West

(C) North (D) East

கிராமத்தில் நில அளவையின்போது புலஎண்கள் ———— திசையிலிருந்து ஆரம்பிக்கப்படவேண்டும்

(A) வடகிழக்கு (B) வடமேற்கு

(C) வடக்கு (D) கிழக்கு

11. The longest line Passes along the perpendicular and opposite side of a triangle in a straight angled triangle is called as

(A) Base line (B) Perpendicular line

(C) Hypotenuse (D) Horizontal line

ஒரு செங்கோண முக்கோணத்தில் நேர்கோணத்திற்கு எதிராக உள்ள பக்கத்திற்கு ———— எனப்படும்

(A) அடித்தளம் (B) செங்குத்து கோடு

(C) கர்ணம் (D) படுக்கை கோடு

12. The A stones of field Survey is in ———— measurement

(A) 60 cm × 15 cm × 15 cm (B) 90 cm × 22.5 cm × 22.5 cm

(C) 40 cm × 20 cm × 20 cm (D) 30 cm × 15 cm × 15 cm

நில அளவை A கற்கள் ———— அளவுகளில் இருக்கும்

(A) 60 cm × 15 cm × 15 cm (B) 90 cm × 22.5 cm × 22.5 cm

(C) 40 cm × 20 cm × 20 cm (D) 30 cm × 15 cm × 15 cm

13. A subdivision paper apply for through the ———— office

(A) Taluk Office (B) Assistant Director of Survey

(C) Sub collector (D) Common Service Centre

ஒரு சர்வே புலத்தின் ஒரு பகுதியை தனியாக உட்பிரிவு செய்து பட்டா கோரும் மனுக்களை தற்போது ———— அலுவலகத்தின் மூலம் மனு செய்ய வேண்டும்

(A) வட்டாட்சியர் (B) உதவி இயக்குநர்

(C) சார் ஆட்சியர் (D) பொதுசேவை மையம்

14. The Tahsildar sanction the subdivision files of maintain

(A) Patta Transfer Register (B) 8 A Register

(C) "F" Line Register (D) Personal Register

வட்டாட்சியரால் அங்கீகாரம் செய்யப்பட்ட உட்பிரிவு கோப்புகள் ———— பதிவேட்டில் பதியப்படும்

(A) பட்டா மாறுதல் பதிவேடு (B) 8 A பதிவேடு

(C) "F" லைன் பதிவேடு (D) தன்பதிவேடு

15. Changes carried out ———— Account in patta transfer files

(A) 4 (B) 1

(C) 3 (D) 5

பட்டா மாறுதல் தொடர்பாக கிராமக் கணக்கு எண் ———— பதிவு செய்யப்பட வேண்டும்

(A) 4 (B) 1

(C) 3 (D) 5

16. This Department has been obtaining the growth through ————by updating the maintenance of land records in Internet software

(A) Central Government (B) Corporation

(C) State National Information Centre (D) Survey Department

நில அளவை துறையானது நேரடியாக நில ஆவணங்களினுடைய பராமரிப்பை ———— வாயிலாக வலைதள மென்பொருளில் உள்ளீடு செய்து வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது

(A) மத்திய அரசாங்கம் (B) மாநகராட்சி

(C) மாநில தேசிய தகவல் மையம் (D) நில அளவைத் துறை

17. ———————— Notice should be given for renewal the Missing stones

(A) 15 (2) (B) 6 (1)

(C) 9 (1) (D) 15

காணாமல் போன கற்களை புதுப்பிக்க ———————— நோட்டீஸ் கொடுக்க வேண்டும்

(A) 15 (2) (B) 6 (1)

(C) 9 (1) (D) 15

18. The Government lands, encroachments should be registered in

(A) Chitta (B) "A" Register

(C) Adangal (D) 8 A

புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை ———————— பதிவேட்டில் பதிவு செய்யவேண்டும்

(A) சிட்டா (B) "அ" பதிவேடு

(C) அடங்கல் (D) 8 ஏ

19. Which is requested to be submitted for the waste land should be

(A) RTR Register (B) Register Number 4

(C) Register Number 7 (D) Register Numbers 5

தரிசு நிலத்தில் ஒப்படை செய்யக்கோரிய மனு ———————— பதிவேட்டில் பதிந்து நடவடிக்கை எடுக்கப்படும்

(A) RTR பதிவேடு (B) பதிவேடு எண் 4

(C) பதிவேடு எண் 7 (D) பதிவேடு எண் 5

20. A big Triangle can be easily drawn in ———————— method

(A) Simple (B) Triangle

(C) Kasara (D) Punganoor

———————— முறையில் பெரிய முக்கோணம் அமைத்து எளிதில் படம் வரையலாம்

(A) சாதாரண முக்கோண முறை (B) மூலைவிட்ட முக்கோணம் முறை

(C) கசரா முறை (D) புங்கனூர் முறை

21. The formula ———— is used to find the area of straight angled triangle

(A) 1/2 bh
(B) $a^2$
(C) $a^2+b^2$
(D) $S=S(S-a)(S-b)(S-c)$

நேர்கோண முக்கோணத்தின் பரப்பளவை கண்டுபிடிக்க ———— சூத்திரம் பயன்படுத்தப்படுகிறது

(A) 1/2 bh
(B) $a^2$
(C) $a^2+b^2$
(D) $S=S(S-a)(S-b)(S-c)$

22. If the difference between the registered / recorded area and the calculated area is more than 5% of the difference between the 5% of total area and subdivisions, the area should be balanced through

(A) Should be balanced the registered area
(B) Should balanced the calculated area
(C) Should balanced as per the area balancing rules account
(D) Should balanced the area of subdivisions

பதிவு செய்யப்பட்ட பரப்பிற்கும் கணிக்கப்பட்ட பரப்பிற்கும் உள்ள வித்தியாசம் மொத்த பரப்பு 5 சதவீதத்திற்கும், உட்பிரிவுகளுக்கிடையே உள்ள பரப்பு 5 சதவீதத்திற்கு மேல் இருந்தால் ———— மூலம் பரப்பு சரிகட்டப்பட வேண்டும்

(A) பதிவு செய்யப்பட்ட பரப்பினை அனுசரிக்க வேண்டும்
(B) கணிக்கப்பட்ட பரப்பினை அனுசரிக்க வேண்டும்
(C) பரப்பு சரிகட்டல் விதிமுறை கணக்கீட்டின்படி அனுசரிக்க வேண்டும்
(D) உட்பிரிவுகளின் பரப்பினை அனுசரிக்க வேண்டும்

23. A individual handed over gives up his possession his land should be registered in ———— account

(A) Taluk Account No 6
(B) Taluk Account No 5
(C) Taluk Account No 7
(D) Taluk Account No 4

தனிநபர் தனக்குள்ள நிலத்தின் உரிமையை அரசுக்கு கொடுப்பது தொடர்பான மனு ———— பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்

(A) வட்ட கணக்கு எண் 6
(B) வட்ட கணக்கு எண் 5
(C) வட்ட கணக்கு எண் 7
(D) வட்ட கணக்கு எண் 4

24. Taluk Account 8A is maintained in ———— year

(A) Calendar year
(B) Half Yearly
(C) Fasli Year
(D) Financial year

வட்ட கணக்கு 8 ஏ ———— ஆண்டில் பராமரிக்கப்படுகிறது

(A) காலண்டர் ஆண்டு
(B) அரையாண்டு
(C) பசலி ஆண்டு
(D) நிதியாண்டு

25. "B" Sketch refer to ————

(A) Survey Numbers
(B) Angles and Distances
(C) Field Measurements
(D) Subdivision Measurements

"பி" வரைபடத்தில் ———— குறிப்பிடப்பட்டிருக்கும்

(A) புலஎண்கள்
(B) கோணங்கள், தூரங்கள்
(C) எல்லை அளவர்
(D) உட்பிரிவு அளவுகள்

26. The magnetic needle used for showing the ———— direction in Traverse station.

(A) North
(B) South
(C) North West
(D) East

டிராவர்ஸ் நிலையத்தில் ———— திசையை காட்ட காந்த ஊசி பயன்படுகிறது

(A) வடக்கு
(B) தெற்கு
(C) வடமேற்கு
(D) கிழக்கு

27. The round shaped steel plate, situated at the top moving net of lower plate in angle instrument is called as

(A) Lower plate
(B) Upper plate
(C) Plaumet
(D) Tripad

கோண கருவியில் லோயர் பிளேட்டின் மேல் நகரும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும் வட்ட வடிவ தகடு ———— எனப்படும்

(A) லோயர் பிளேட்
(B) அப்பர் பிளேட்
(C) பிளாமட்
(D) டிரைபேட்

28. While taking the Traverse survey at first it is calculated as per the formula of the sum of the angles is

(A) $2n - 4 \times 90^\circ$ (B) $4n \times 90^\circ$

(C) $2n - 4 \times 90''$ (D) $2n - 4 \times 180^\circ$

டிராவர்ஸ் கணக்கீடு செய்யும்போது முதலில் கோணங்களின் கூடுதல் ———————— என்ற சூத்திரத்தின் படி கணக்கீடு செய்யப்படுகிறது

(A) $2n - 4 \times 90^\circ$ (B) $4n \times 90^\circ$

(C) $2n - 4 \times 90''$ (D) $2n - 4 \times 180^\circ$

29. The sub-process number for the work of verifying the triangles and calculating the distances is

(A) SP 5 A (B) SP 9

(C) SP 20 (D) SP 12

முக்கோணங்களை சரிபார்த்தல் தூரங்களை கணக்கிடல் ஆகிய பணிகளின் சப்-பிராசஸ் எண்

(A) SP 5 A (B) SP 9

(C) SP 20 (D) SP 12

30. The Sub-Process number for drawing the Traverse / sketch is

(A) SP 11 (B) SP 36(c)

(C) SP 28 (D) SP 23

டிராவர்ஸ் படம் வரைதலுக்கான சப்-பிராசஸ் எண்

(A) SP 11 (B) SP 36(c)

(C) SP 28 (D) SP 23

31. The Verification of comparing the original field sketch and the duplicate field sketch is

(A) SP 36 (A) (B) SP 36 (B)

(C) SP 41 (A) (D) SP 41 (B)

அசல் புலப்படத்துடன் நகல் புலப்படத்தை ஒப்பிட்டு சரிபார்த்தல் பணிக்கான சப்-பிராசஸ் எண்

(A) SP 36 (A) (B) SP 36 (B)

(C) SP 41 (A) (D) SP 41 (B)

32. SP 55 is

(A) The area, calculated using computing scales

(B) Verifying the calculated area

(C) Verifying the perpendicular measurement for the calculated area

(D) Verifying the Rough area list

SP 55

(A) கம்ப்யூட்டிங் அளவுகோல் கொண்டு பரப்பு கணித்தல்

(B) பரப்பு கணிதத்தை சரிபார்த்தல்

(C) குத்தளவுகளின் பரப்பு கணிதத்தை சரிபார்த்தல்

(D) தோராய பரப்பு பட்டியல் சரிபார்த்தல்

33. The name of the software which is used to draw the field sketch through the computer is

(A) Tamil Nilam

(B) Collabland

(C) Digitization

(D) Autocad

புலப்படங்கள் —————— மென்பொருளில் வரைவு செய்யப்படுகிறது

(A) தமிழ்நிலம்

(B) கொலப்லேண்ட்

(C) கணினிமயமாக்கல்

(D) ஆட்டோகேடு

34. The notice which is legally for the correct boundary decision as per the field survey work done is

(A) Section 5

(B) Section 8 (1)

(C) Section 9(1)

(D) Section 13

நில அளவை சம்மந்தப்பட்ட அனைத்து பணிகளும் முடிவுற்றபின் —————— ல் விளம்பரம் செய்யப்படும்

(A) பிரிவு 5

(B) பிரிவு 8 (1)

(C) பிரிவு 9 (1)

(D) பிரிவு 13

35. The officer who obtains the power of Revenue correction the village boundaries is

(A) District Revenue Officer

(B) The District Collector

(C) Assistant Director of Survey

(D) Tahsildar

கிராம எல்லைகளை திருத்தம் செய்வதற்கு அதிகாரம் பெற்ற அலுவலர்

(A) மாவட்ட வருவாய் அலுவலர்

(B) மாவட்ட ஆட்சியர்

(C) உதவி இயக்குநர் (நி.அ)

(D) வட்டாட்சியர்

36. In Taluk office maintain very important ———— Register

(A) Taluk "A" Register (B) Adangal

(C) Chitta (D) FMB

வட்ட அலுவலகத்தில் பராமரிக்கப்படும் முக்கியமான ஆவணங்களில் இதுவும் ஒன்று

(A) வட்ட "அ" பதிவேடு (B) அடங்கல்

(C) சிட்டா (D) புலப்படசுவடி

37. The maintenance field Survey should over check ———— % of the total number of stones to be inspected by VAO

(A) 5 (B) 10

(C) 15 (D) 20

கிராம நிர்வாக அலுவலரால் தணிக்கை செய்யப்பட வேண்டிய மொத்த கற்களின் எண்ணிக்கையில் ———— பராமரிப்பு நில அலுவலரால் மேல்தணிக்கை செய்யப்பட வேண்டும்

(A) 5% (B) 10%

(C) 15% (D) 20%

38. The field Survey advance account is

(A) Tamil Nilam Software (B) Town Survey

(C) Expenditure of land Survey mark (D) Field map book

நில அளவை முன்பண கணக்கு ———— ஆகும்

(A) தமிழ்நிலம் மென்பொருள் (B) நகர அளவை

(C) நில அளவைக்குறி செலவினத்தொகை (D) புலப்படச்சுவடி

39. 10 Cm is equal to

(A) 1 mm (B) 0.2 m

(C) 1 km (D) 1 decimeter

10 செமீ என்பது ———— க்கு சமம்

(A) 1 மி.மீ (B) 0.2 மீ

(C) 1 கி.மீ (D) 1 டெசி.மீ

40. ———— boundary is not in District map

(A) Taluk boundary (B) Field Boundary

(C) District boundary (D) State boundary

மாவட்ட வரைபடத்தில் ———— எல்லை இருக்காது

(A) வட்ட எல்லை (B) புல எல்லை

(C) மாவட்ட எல்லை (D) மாநில எல்லை

41. All the new subdivisions sanctioned by the Taluk Tahsildar should be approved files entered in ———— register

(A) 4
(B) 6 (2)
(C) inspection
(D) 8 A

வட்டாச்சியரால் அங்கீகரிக்கப்பட்ட புதிய உட்பிரிவுகள் அனைத்தும் ———— பதிவேட்டில் பதியப்படவேண்டும்

(A) 4 ஆம்
(B) 6 (2)
(C) ஆய்வறிக்கை
(D) 8 ஏ

42. Before commencing the field work ———— record prepared

(A) Town Sketch
(B) Topographical Map
(C) Location Sketch
(D) Index Map

புலப்பணி ஆரம்பிக்கும் முன்னர் ———— தயாரிக்கப்பட வேண்டும்

(A) நகர வரைபடம்
(B) இட அமைப்பு விவர வரைபடம்
(C) இடம் காணும் வரைபடம்
(D) அட்டவணை வரைபடம்

43. 180 ° is the sum of

(A) The sum of Triangles
(B) Four — arms
(C) Rectangle
(D) Square

180° என்பது ———— ன் கூடுதல் ஆகும்.

(A) முக்கோணங்களின் கூடுதல்
(B) நாற்கரம்
(C) செவ்வகம்
(D) சதுரம்

44. The classifications between the field is

(A) Irrigation
(B) Field map book
(C) Dry / Wet / Poromboke
(D) Soil Conservation

நிலங்களினுடைய வகைபாடு என்பது

(A) பாய்ச்சல் ஆதாரம்
(B) புலப்படசுவடி
(C) புன்செய் நன்செய் மற்றும் அரசு புறம்போக்கு
(D) மண்வயனம்

45. 2.47 acre is

(A) 2 Hectare
(B) 100 ares
(C) 1 hectare
(D) 10 hectare

2.47 ஏக்கர் என்பது

(A) 2 ஹெக்டேர்
(B) 100 ஏர்ஸ்
(C) 1 ஹெக்டேர்
(D) 10 ஹெக்டேர்

46. Best time of Azimuth work is

(A) 6 am to 7 am (B) 7 am to 8 am
(C) 10 am to 11am (D) 2 pm to 3 Pm

அஸ்மத் பணி செய்ய ———————— நேரம் சரியானது

(A) 6 am to 7 am (B) 7 am to 8 am
(C) 10 am to 11am (D) 2 pm to 3 Pm

47. The logarithm of 60

(A) 1.7781513 (B) 1.0778152
(C) 0.1778521 (D) 1.0788154

60 க்கு லாக் (log)

(A) 1.7781513 (B) 1.0778152
(C) 0.1778521 (D) 1.0788154

48. How many minimum times of using the substance bar (Reputation work) Calculate work

(A) 4 (B) 7
(C) 5 (D) 10

Substance bar ல் மறு கணக்கீடு (Reputation) பணி செய்ய குறைந்தது எத்தனை முறை கணக்கீடு செய்யலாம்

(A) 4 (B) 7
(C) 5 (D) 10

49. Formation of minor Circuit field ———————— Stations

(A) 6 (B) 8
(C) 5 (D) 10

சிறு சுற்றுபுலம் அமைக்க குறைந்தது ———————— நிலையங்கள் தேவை

(A) 6 (B) 8
(C) 5 (D) 10

50. Which place marked in chain Survey stone in Town Survey

(A) In between Two traverse
(B) Common Boundary of Two Blocks
(C) Side of Street
(D) Near to Canal

ஒரு நகர அளவை பணியில், சங்கிலி அளவை கற்கள் எங்கு அமைக்கப்படுகிறது

(A) ஒரு டிராவர்ஸிக்கும் மற்றொரு டிராவர்ஸிக்கும் இடையில்
(B) இரண்டு பிளாக்குகளின் பொதுவான எல்லையில்
(C) தெருவின் ஓரத்தில்
(D) வாய்க்கால் அருகில்

51. Used for GPS / Co-ordinate is

(A) Spherical (B) Rightangle Triangle

(C) Parallax (D) Partual line

GPS மூலம் கிடைக்கும் Co-ordinate

(A) ஸ்பெரிக்கல் (B) செங்கோணம் முக்கோணம்

(C) ஃப்ராலெக்ஸ் (D) பார்சுவல் லைன்

52. Already Surveyed Area again measured the called is

(A) Initial Survey (B) Resurvey

(C) Town Survey (D) Topographical

நில அளவை செய்யப்பட்ட பகுதியில் மீள நில அளவை மேற்கொள்வது

(A) ஆரம்ப நில அளவை (B) மறுநில அளவை

(C) நகர அளவை (D) ஸ்தல அளவை

53. Azimuth must be observed at the intervals of ———— stations through out the main circuit boundaries

(A) 50 to 60 (B) 40 to 50

(C) 30 to 40 (D) 60 to 70

பிரதான சுற்று எல்லையில் அஸிமத் விவரங்கள் ———— நிலையங்களுக்கு இடையில் எடுக்கப்பட வேண்டும்

(A) 50 முதல் 60 (B) 40 முதல் 50

(C) 30 முதல் 40 (D) 60 முதல் 70

54. Taluk maps are generally plotted to the Scale of

(A) 1:1000 (B) 1:5000

(C) 1:2000 & 1:500 (D) 1:50000 & 1:75000

வட்ட வரைபடங்கள் பொதுவாக ———— அளவு கோலுக்கு தயாரிக்கப்படுகிறது

(A) 1:1000 (B) 1:5000

(C) 1:2000 & 1:500 (D) 1:50000 & 1:75000

55. The post of Panchayat Surveyor will be made by Promotion from the post of

(A) Office Assistant (B) Maintenance Firka Surveyor

(C) Field Surveyor (D) Deputy Inspector of Surveyor

———— பதவியிலிருந்து பதவி உயர்வு அளிக்கப்படுவதால் பஞ்சாயத்து சர்வேயர் என அழைக்கப்படுகிறது

(A) அலுவலக உதவியாளர் (B) உள்வட்ட அளவர்

(C) நில அளவர் (D) நில அளவை துணை ஆய்வாளர்

56. Deputy inspector of Survey power was given ———— measurement of sub division

(A) Dispute Boundary (B) Field Boundary measurement

(C) Patta Transfer (D) Measurement of Sub division

தலைமை நில அளவருக்கு ———— குறித்து முடிவு செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது

(A) எல்லைத்தாவா (B) புலஎல்லை அளத்தல்

(C) பட்டா மாற்றம் (D) உட்பிரிவு அளத்தல்

57. The ———— is the Surface of reference of astronomic (Observation) and for geodetic leveling

(A) Lines (B) Triangle

(C) Geoid (D) Square

பூமியின் மேற்பரப்பை வானசாஸ்திரம் வானவியல், கோளங்கள் கொண்டு சமன்படுத்தும்போது ———— பயன்படுத்தப்படும்

(A) கோடுகள் (B) முக்கோணம்

(C) கடல்நிலை (D) சதுரம்

58. Consolidated of latitude and Longitude

(A) Formation of River (B) Formation of Drawing

(C) Formation of Road (D) Formation of land

அட்சரேகை, தீர்க்கரேகை ஆகியவற்றின் இணைகோடுகளின் தொகுப்பு

(A) ஆறு உருவாக்கம் (B) வரைபட உருவாக்கம்

(C) சாலை உருவாக்கம் (D) நில உருவாக்கம்

59. ———— is the best fit imaginary circle around the earth

(A) Conic (B) Grid

(C) Ellipsoid (D) Polyconic

உலகை சுற்றி அமைக்கப்பட்ட மிக சிறந்த கற்பனை வட்டத்திற்கு ———— என்று பெயர்

(A) கோனிக் (B) அச்சுகோடு

(C) எலிப்சாய்ட் (D) பாலிகோனிக்

60. A Constant Azimuth (also called rhomb line or loxodrome) is a line that intersects each meridian at the

(A) Various angle (B) 180°

(C) Bearing angle (D) Same angle

அசிமத் வாசிக்கும்போது ஏற்படும் கோடு தீர்க்க ரேகையினை வெட்டும்போது ஏற்படும் கோணங்கள்

(A) பல்வகை கோணங்கள் (B) 180°

(C) துருவ கோணம் (D) சமமான கோணம்

61. The length of the chain should be tested

(A) Once in a week
(B) Once in a month
(C) Daily after survey work
(D) Daily before survey work

சங்கிலியின் நீளத்தை ———————— பரிசோதனை செய்ய வேண்டும்

(A) வாரத்திற்கு ஒரு முறை
(B) மாதத்திற்கு ஒருமுறை
(C) தினந்தோறும் அளவுப்பணிக்கு பின்னர்
(D) தினந்தோறும் அளவுப் பணிக்கு முன்னர்

62. Cost of Stones and Stock Register Maintained by every

(A) March 1 and August 31
(B) March 31 and September 30
(C) March 31 and July 31
(D) September 30 and December 31

நில அளவை கற்களின் இருப்பு மற்றும் கற்களின் விலை மதிப்பு குறித்து ஒவ்வொரு ஆண்டும் ———————— மாதத்தில் கணக்கிடுப்படும்

(A) மார்ச் 1 மற்றும் ஆகஸ்ட் 31 ஆம் நாள்
(B) மார்ச் 31 மற்றும் செப்டம்பர் 30 ஆம்நாள்
(C) மார்ச் 31 மற்றும் ஜீலை 31 ஆம்நாள்
(D) செப்டம்பர் 30 மற்றும் டிசம்பர் 31 ஆம் நாள்

63. ———————— instrument using for plotting sketches

(A) Plotting Scale
(B) Bit Scale
(C) Drawing Pen
(D) Pencil

நில அளவை புலப்படத்தில் குத்தளவு வரைய பயன்படுத்தப்படும் கருவி

(A) அளவுகோல்
(B) துண்டு அளவுகோல்
(C) வரைபேனா
(D) பென்சில்

64. Trijuncfion located in ———————— fields

(A) above 3 fields
(B) Two fields
(C) Three subdivisions
(D) above 3 sub divisions

முச்சந்தி என்பது ———————— புலங்கள் சந்திக்கும் புள்ளியை குறிக்கும்

(A) மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட புலங்கள்
(B) இரண்டு புலங்கள்
(C) மூன்று உட்பிரிவுகள்
(D) மூன்று உட்பிரிவுகளுக்கு மேற்பட்ட உட்பிரிவுகள்

65. Draw the 2 Hectares field in ———————— scale

(A) 1:2000
(B) 1:1000
(C) 1:500
(D) 1:5000

2 ஹெக்டேர் பரப்பளவு உள்ள புலத்தினை ———————— என்ற அளவில் வரைவு செய்ய வேண்டும்

(A) 1:2000
(B) 1:1000
(C) 1:500
(D) 1:5000

66. Which location called as close block in Town Survey

(A) Residence not closed location (B) Residence closed location

(C) Vacant Location (D) Agriculture land

நகர அளவையில் குளோசு பிளாக் என்று ———————— அழைக்கப்படும்

(A) குடியிருப்புகள் நெருக்கமாக இல்லாத பகுதி (B) குடியிருப்புகள் நெருக்கமாக உள்ள பகுதி

(C) காலியாக உள்ள பகுதி (D) விளை நிலங்களாக உள்ள பகுதி

67. Draw the sketch 1:2000, Scale. But area calculate by 1:1000 Square paper calculated the 0.50.0 Acres is ———————— extent

(A) Hect 2.00.0 ares (B) Hect 1.75.0 ares

(C) Hect 12.50.0 ares (D) Hect 4.00.0 ares

1:2000 என்ற விகிதப்படி வரையப்பட்ட படத்தில் 1:1000 என்ற அளவில் உள்ள பரப்பளவு சதுரத்தாளின் மூலம் எடுக்கப்பட்ட பரப்பளவு 0.50.0 ஏர்ஸ் என்றால் சரியான பரப்பளவு

(A) ஹெ 2.00.0 ஏர்ஸ் (B) ஹெ 1.75.0 ஏர்ஸ்

(C) ஹெ 12.50.0 ஏர்ஸ் (D) ஹெ 4.00.0 ஏர்ஸ்

68. ———————— Instrument using for formation of hills, rivers, Grass land sand pormboke minor circuits

(A) Cross staff (B) Theodilite

(C) Tap (D) Plotting scale

குன்றுகள், ஆறுகள் மேய்ச்சல் நிலங்கள், போன்ற பெரிய புறம்போக்குகளை ———————— கருவி கொண்டு சிறுசுற்று புலமாக அமைக்கப்படுகிறது

(A) கிராஸ்ட் டாப் (B) தியாடலைட்

(C) டேப் (D) அளவுகோல்

69. Using for Satellite in ———————— modern instruments

(A) GDPS (B) DGPS

(C) PGDS (D) ETS

சாட்டிலைட் துணையுடன் நவீன தொழில்நுட்ப கருவி

(A) GDPS (B) DGPS

(C) PGDS (D) ETS

70. How many different types of survey work

(A) 3 (B) 8

(C) 12 (D) 10

நில அளவைப் பணிகள் ———————— வகைப்படுத்தப்பட்டுள்ளன

(A) 3 (B) 8

(C) 12 (D) 10

71. Notification under ———— section for initiating survey in Tamil Nadu Government bulletin

(A) Section 4
(B) Section 6 (1)
(C) Section 5
(D) Section 7

ஒரு இடத்தை சர்வே செய்ய அதிகாரம் அளிக்கப்பட்ட விவரத்தை தமிழ்நாடு அரசிதழ் ———— ல் பிரசுரம் செய்யப்படும்

(A) பிரிவு 4
(B) பிரிவு 6 (1)
(C) பிரிவு 5
(D) பிரிவு 7

72. How many Satellite in a orbit

(A) 3
(B) 4
(C) 5
(D) 6

ஒரு Orbit எத்தனை சா்டிலைட்டை சுற்றிவரும்

(A) 3
(B) 4
(C) 5
(D) 6

73. Cost of Contribution from Municipality for town survey work

(A) 1/3 part
(B) 2/3 part
(C) 1/4 part
(D) 1/2 part

நகர அளவை பணி செய்ததற்கான நகராட்சியின் பங்கு தொகை

(A) 1/3 பாகம்
(B) 2/3 பாகம்
(C) 1/4 பாகம்
(D) 1/2 பாகம்

74. ———— Type of stone was which place in the village Trijunction

(A) Khandam Stone
(B) C.S. Stone
(C) B. Stone
(D) A Stone

கிராம முச்சந்தியில் ———— கற்கள் இருக்கும்

(A) கண்ட கற்கள்
(B) C.S. கல்
(C) B கல்
(D) A கல்

75. How many type of Errors in Boundary Democaration work

(A) 4
(B) 5
(C) 7
(D) 8

நில அளவை எல்லை வரையறை செய்யும்போது ———— வகையான பிழைகள் ஏற்படும்

(A) 4
(B) 5
(C) 7
(D) 8

76. In Traverse calculated to find bearing if it exceed 540° means use do ————

(A) Substract
(B) Add
(C) Divide
(D) Multiply

டிராவர்ஸ் கணக்கீட்டின்படி பேரிங் கண்டுபிடிக்கும்போது 540° டிகிரிக்கு மேல் இருந்தால்

(A) கழிக்க வேண்டும்
(B) கூட்ட வேண்டும்
(C) வகுக்க வேண்டும்
(D) பெருக்க வேண்டும்

77. Foundation of G. T station

(A) Thomas Alva Edison
(B) Karnal William Lamdon
(C) Karnal William
(D) Lamdon

G.T. நிலையத்தை நிறுவியவர்

(A) தாமஸ் ஆல்வா எடிசன்
(B) கர்னல் வில்லியம் லேம்டன்
(C) கர்னல் வில்லியம்
(D) லேம்டன்

78. ———— Instrument using to draw in between two points

(A) Diagonal Scale
(B) Cross staff
(C) Simple Scale
(D) Chain

இரண்டு புள்ளிகளுக்கு இடைப்பட்ட தூரத்தை அளவீடு செய்ததை வரைவதற்கு பயன்படுத்தப்படும் ஒரு தட்டையான கருவி ————

(A) மூலைவிட்ட அளவுகோல்
(B) கிராஸ்டாப்
(C) சாதாரண அளவுகோல்
(D) செயின்

79. Minimum how many persons wanted to draw the Pantograph instrument

(A) 4
(B) 3
(C) 2
(D) 1

பெண்டகிராப் (Pantagraph) கருவியைக் கொண்டு வரைவு செய்ய குறைந்தது ———— பணியாளர்கள் தேவை.

(A) 4
(B) 3
(C) 2
(D) 1

80. Boundary Pillar higher labour charges will ———— in stone renewal bills by Survey Department

(A) Be Added
(B) Not added
(C) Be added for 3 persons
(D) Be added for 2 persons

நில அளவைத்துறை சார்பில் நடப்படும் கல்புதுப்பித்தல் பட்டியல்களுக்கு கணக்கீடு செய்யும் போது கூலித்தொகையை ————.

(A) சேர்க்கலாம்
(B) சேர்க்கக்கூடாது
(C) 3 நபர்களுக்கு சேர்த்து போடலாம்
(D) 2 நபர்களுக்கு சேர்த்து போடலாம்

81. In land Surveying, what does GIS stands for
(A) Geological Investigation System
(B) Geographic infrastructure service
(C) Geographic information system
(D) Geodetic information system

நிலவியலில் GIS எனப்படும் நிலவியல் தகவல் முறைமை ———————— பயன்படுகிறது
(A) நிலவியல் புலனாய்வு முறையில்
(B) நிலவியல் கட்டமைப்பு முறையில்
(C) நிலவியல் தகவல் முறையில்
(D) நிலவள தகவல் முறையில்

82. View of angle through the Traverse line which adjustment should adjust the Theodilite
(A) Permanent
(B) Temporary
(C) Center
(D) Screw

தியோடலைட் கருவி மூலம் டிராவர்ஸ் லைனில் உள்ள கோணங்களை பார்க்கும்பொழுது ———————— அட்ஜஸ்மென்ட் (Adjustment) செய்யவேண்டும்
(A) நிலையானது (Permanent)
(B) தற்காலிகமானது (Temporary)
(C) நடுநிலை (Center)
(D) திருகாணி

83. ———————— minute is in village boundary traverse with in 5 stations calculation error
(A) 5 Minutes
(B) 2 Minutes
(C) 1 Minute
(D) 4 Minutes

கிராம பகுதிகளில் டிராவர்ஸ் சர்வேயில் 5 நிலையங்களுக்கு ———————— நிமிடம் கோண அளவில் கணக்கீட்டு பிழையாகும்
(A) 5 நிமிடம்
(B) 2 நிமிடம்
(C) 1 நிமிடம்
(D) 4 நிமிடம்

84. In Town Survey closed Block Maps should be plotted in 1 : ———————— mm scale
(A) 1:1000 mm
(B) 1:5000 mm
(C) 1:2000 mm
(D) 1:500 mm

நகர அளவையில் நெருக்கமான பகுதி 1: ———————— அளவுகளில் வரைவு செய்யவேண்டும்
(A) 1:1000 மிமீ
(B) 1:5000 மிமீ
(C) 1:2000 மிமீ
(D) 1:500 மிமீ

85. The set of Revenue maps should be maintained by the town Sub Inspector of Survey
(A) Bounded in Volume
(B) Mounted in cloth
(C) In litho form
(D) In tracing sheet

நகர அளவை சார் ஆய்வாளரால் பராமரிக்கப்பட வேண்டிய வருவாய் வரைபடங்களின் படிகள் ———————— இருக்க வேண்டும்
(A) மேல் அட்டை போட்ட தொகுப்பாக
(B) துணியில் ஒட்டப்பட்டதாக
(C) லித்தோ படிவத்தில்
(D) படி எடுக்கும் தாளில்

86. In Town Survey open block should be ———— Hectors

(A) 16 Hect (B) 64 Hect

(C) 38 Hect (D) 72 Hect

நகர அளவையில் திறந்த வெளி பகுதி ———— பரப்பில் அமைக்கப்படுகிறது

(A) 16 ஹெக்டேர் (B) 64 ஹெக்டேர்

(C) 38 ஹெக்டேர் (D) 72 ஹெக்டேர்

87. ———— Register is maintain in Taluk office Village wise survey advance Demand Collection

(A) Register VII (B) Register VI

(C) Register VIII (D) Register V

வட்ட அலுவலகத்தில் சர்வே முன் கணக்கு தொடர்பாக கிராம வாரியாக கேட்பு பட்டியல், நிலுவை பற்றிய விவரம் ———— பதிவேட்டில் குறிக்கப்பட்டிருக்கும்

(A) பதிவேடு VII (B) பதிவேடு VI

(C) பதிவேடு VIII (D) பதிவேடு V

88. After 13 notification in District Gazette published applied petition filed ———— period

(A) Below 5 years (B) Below 4 years

(C) Below 3 years (D) above 3 years

13 வது இறுதி விளம்பரம் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்த பிறகு எல்லை தாவா தொடர்பாக விளம்பரம் செய்த தேதியிலிருந்து ———— ஆண்டுகளுக்குள் நீதிமன்றத்தின் மூலம் தீர்வு காணலாம்

(A) 5 ஆண்டுகளுக்குள் (B) 4 ஆண்டுகளுக்குள்

(C) 3 ஆண்டுகளுக்குள் (D) 3 ஆண்டுக்கு மேல்

89. Computer Chitta prepared in ———— software

(A) Tamil Nilam Software (B) Collabland

(C) Tamil software (D) Development of Tamil

———— ல் கணினி சிட்டா தயாரிக்கப்படுகிறது

(A) தமிழ்நிலம் மென்பொருள் (B) கொலப்லேண்ட்

(C) தமிழ்மென்பொருள் (D) தமிழ்வளர்ச்சி

90. In the traverse meridian, perpendicular are called

(A) Latitude (B) Departure

(C) Co ordinate (D) True bearing

தொடக்க நிலையத்திலிருந்து கணக்கிடப்படும் நடுநிரல் தூரங்களும் செங்குத்துத் தூரங்களும், டிராவர்ஸின் —————— எனப்படும்

(A) பூமத்தியரேகை (B) புறப்பாடு

(C) அச்சுதூரங்கள் (D) துருவகோணம்

91. Which of the following Function is accessory to Data Analysis Operation?

(A) Output and visualization (B) Data Manipulation

(C) Overlay analysis (D) Management

"Data Analysis operation" எனப்படும் தகவல் பகுப்பாய்வு மூலம் கீழ்க்கண்ட எந்த செயல்பாடு நடைபெறும்

(A) வெளிதரவு மற்றும் காணொளி (B) தரவு திறனாய்வு

(C) ஒன்றை சார்ந்த பகுப்பாய்வு (D) மேலாண்மை

92. The amount of Filed line fees collected —————— Head of Account

(A) 8085 LR (B) 0029 LR

(C) 8850 LR (D) 029 LR

புலஎல்லை கட்டணம் —————— தலைப்பில் செலுத்தப்படுகிறது

(A) 8085 LR (B) 0029 LR

(C) 8850 LR (D) 029 LR

93. Generally using the metric chains ——————

(A) 30 m (B) 10 m

(C) 20 m (D) 40 m

பொதுவாக பயன்படுத்தப்படும் மெட்ரிக் சங்கிலியின் நீளம் ——————

(A) 30 மீ (B) 10 மீ

(C) 20 மீ (D) 40 மீ

94. ———— the officer who is the main work of the renewal of Theodolite Missing stones.

(A) Inspector of Survey

(B) Deputy Inspector of Survey

(C) Sub Inspector of Survey

(D) Maintenance Firka Surveyor

காணாமல் போன தியோடலைட் கற்களை மீள பொருத்தும் பணி ———— ன் முக்கிய பிரதான பணியாகும்

(A) நில அளவை ஆய்வாளர்

(B) நில அளவை துணை ஆய்வாளர்

(C) வட்ட சார் ஆய்வாளர்

(D) பராமரிப்பு குறுவட்ட அளவர்

95. In FMS Digitations process under collabland software finally approved authorities is

(A) District Revenue Officer

(B) Revenue Divisional Officer

(C) Tahsildar

(D) Deputy Tahsildar

கணினியில் புலப்படங்களை கொலப்லேண்ட் மென்பொருளில் வரைவு செய்ததை இறுதியாக அங்கீகாரம் செய்யும் அலுவலர்

(A) மாவட்ட வருவாய் அலுவலர்

(B) வருவாய் கோட்டாட்சியர்

(C) வட்டாட்சியர்

(D) துணை வட்டாட்சியர்

96. GTS Bench mark means

(A) Geo-Trigonometric station

(B) Great triangle stations

(C) Height from sea level

(D) Great trigonometric

ஜி.டி.எஸ். பெஞ்ச் மார்க் என்பது

(A) புவி முக்கோணயியல் நிலையம்

(B) பெரிய முக்கோண நிலையம்

(C) கடல் நிலையில் இருந்து கணக்கிடப்படும் உயரம்

(D) பெருஞ்சுற்று முக்கோணயியல்

97. To find out true north under bearing calculation by using ———— survey

(A) Field Work

(B) Traverse

(C) Angle

(D) Location work

———— அளவையின்போது உண்மையான வடக்குதிசை அறிய துருவகோணம் கணக்கிடப்படுகிறது

(A) புலப்பணி

(B) டிராவர்ஸ்

(C) கோண அளவை

(D) பார்வையிடல்பணி

98. Under land Survey any one of the angle in the triangle should not below

(A) 80°

(B) 30°

(C) 60°

(D) 180°

நில அளவையில், முக்கோணங்களில் எந்த ஒரு கோணமும் ________ விட குறைவாக இருக்கக்கூடாது

(A) 80°

(B) 30°

(C) 60°

(D) 180°

99. ________ Used Record Azimosh work

(A) C.S.M(B)

(B) Town Survey

(C) "D" Sketch

(D) C.S.M(A)

பயிர் சாகுபடி கணக்கீடு செய்ய பயன்படுவது ________ ஆகும்

(A) சி.எஸ்,எம்.(பி)

(B) நகர நில அளவை

(C) கல்வரைபடம் ("D" Sketch)

(D) சி.எஸ்.எம். (ஏ)

100. Re process of adjusting the position of point on plane table exactly over its position on ground station is called as

(A) Levelling

(B) Orientation

(C) Centering

(D) Traversing

புலத்தின்மீது அமைந்துள்ள நிலையத்தின் மீது பிளெய்ன் டேபிள் நில அளவை பலகையை சரியாக வைக்கும் முறைக்கு ________ என்று பெயர்

(A) சமப்படுத்துதல்

(B) ஓரியன்டேஷன்

(C) மையப்படுத்துதல்

(D) டிராவர்ஸிங்